அற்புத குர்ஆனையும், இஸ்லாமிய சட்ட திட்டங்களையும்
இலகுவான வழிகாட்டலுடன் குறுகிய காலத்தில்
சகலரும் கற்றுக்கொள்ள ஏற்ற
இஸ்லாமிய கற்கை நிலையம்.

MATHADHU MARIFIL ISLAM

**MMI**
**இஸ்லாமிய கற்கை நிலையம்**
**காயர் வீதி, ஏறாவூர்.02C**
Mob/ 077 0498232

HAANI PRINTERS, ERAVUR.

# الأحاديث الطيبة

# நறுமணங்கமழும் நபி மொழிகள்

தொகுப்பு :- மௌலவி K.M. அஷ்ரப் (முஸ்தபி)




வெளியீடு :
**MMI**
இஸ்லாமிய கற்கை நிலையம்
காயர் வீதி, ஏறாவூர்.02C
Mob/ 077 0498232

120/-

---



# நறுமணங்கமழும் நபி மொழிகள்

தொகுப்பு :

மௌலவி : கே.எம். அஷ்ரப் (முஸ்தபி)
ஆசிரியர் MMI இஸ்லாமிய கற்கை நிலையம்
ஏறாவூர் – 2 C

வெளியீடு :
2013.04.23
MMI இஸ்லாமிய கற்கை நிலையம்
காயர் வீதி
ஏறாவூர் – 2 C

# முன்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அனைத்துப் புகழும் அருளாலன் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும் அல்ஹம்துலில்லாஹ்.சலவாத்தும் சலாமும் சாந்தி நபிகளார்மீதும், அன்னாரின் குடும்பத்தினர், அருமைத் தோழர்கள் மீதும் உரித்தாகட்டும்.

தற்காலத்தில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகங்கள் வரை மாணவர்களுக்கு கல்வியூட்டும் விடயங்களில் பல யுக்திகள் கையாளப்பட்டு இலகுவான வழிகாட்டல்களுடன் கற்கை முறைகள் காணப்படுகின்றன.

அனைத்துக் கல்விகளும் வளர்ச்சி கண்டுவரும் தற்கால சூழலில் இஸ்லாமிய மார்க்க அடிப்படைக்கல்வியிலும் இஸ்லாமிய சிறார்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும்,இதனைக்கற்று செயல் முறைப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் "நறுமணங்கமழும் நபி மொழிகள்" எனும் இச்சிறு நூலையும் அத்தோடு ஒரு தனித் தொகுப்பாக "அல்ம∴துராத்" எனும் நூலையும் இதோடு இனைத்து தொகுத்தளித்துதுள்ளேன்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து எனும் பல மொழிக்கு ஏற்ப இவ்விரு நூற்களிலும் அடங்கியுள்ள ஹதீஸ்களும் சந்தர்ப்ப துஆக்களும் இளம் சிறார்களின் மனதில் மிக எளிதாக இடம் பிடிக்கும் விதத்தில் நிகழ்வுகளை சித்தரிக்கும் வகையில் இதனோடு படங்களை சேர்த்துள்ளேன். இதனை கற்று அனைவரும் பயன் பெறுவோமாக! ஆமீன்..

மௌலவி : கே.எம் அஷ்ரப் (முஸ்தபி)



# பொருளடக்கம்

01.சலாம் சொல்லுவோம் 05
02.சுத்தமாக இருப்போம் 06
03.கல்வியை கற்போம் 07
04.கல்வியை கற்கச் செல்வோம் 08
05.அல்லாஹ்வை தொழுவோம் 09
06.சகோதரத்துவத்தை பேணுவோம் 10
07.உண்மை பேசுவோம் 11
08.வெட்கம் அடைவோம் 12
09.அல் குர்ஆனை ஓதுவோம் 13
10.பெற்றோரின் பொருத்தத்தை பெறுவோம் 14
11.கோபத்தை விட்டுவிடுவோம் 15
12.உறவினர்களுடன் அன்பாய் பழகுவோம் 16
13.இசையை தவிர்த்துக் கொள்வோம் 17
14.அல்லாஹ்விடம் துஆ செய்வோம் 18
15.கோள் சொல்லாது இருப்போம் 19
16.மரியாதையாக நடப்போம் 20
17.அநியாயம் செய்யாது இருப்போம் 21
18.அல்லாஹ்வை பயப்படுவோம் 22
19.நம்பிக்கையை நிறைவேற்றுவோம் 23
20.கூலியை உடனே கொடுப்போம் 24
21.நல்லதை ஏவுவோம் 25



22.தீயதை தடுப்போம் 26
23.மதுப்பழக்கத்தை விடுவோம் 27
24.தர்மம் செய்வோம் 28
25.நல்ல வியாபாரியாக இருப்போம் 29
26.நல்ல முஸ்லிமாக வாழ்வோம் 30
27.புன்னகையுடன் முகம் பார்ப்போம் 31
28.அன்னியரை பின்பற்றாதிருப்போம் 32
29.நல்ல மனைவியாக வாழ்வோம் 33
30.மிஸ்வாக் செய்வோம் 34
31.பிறரை ஏமாற்றாமலிருப்போம் 35
32.நல்ல நண்பனோடு பழகுவோம் 36
33.திருடாமலிருப்போம் 37
34.சிறந்த பெண்ணாய் இருப்போம் 38
35.ஆயுதத்தை ஏந்தாதிருப்போம் 39
36.அவசரப்படாதிருப்போம் 40
37.நற்குணமுடையவராய் இருப்போம் 41
38.சிறியோருக்கு இரக்கம் காட்டுவோம் 42
39.ஒரு முஸ்லிமை ஏசாமலிருப்போம் 43
40.அண்டை வீட்டாருக்கு உதவுவோம் 44
41.சேவலை திட்டாமலிருப்போம் 45
42.ஒற்றுமையை கடைப்பிடிப்போம் 46
43.நோய் விசாரிப்போம் 47



## 1.சலாம் சொல்லுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْبَادِئُ بِالسَّلاَمِ بَرِئٌ مِنَ الْكِبْرِ



சலாமைக்கொண்டு முதலில் ஆரம்பிப்பவன் தற்பெருமையை விட்டும் நீங்கியவன் ஆவான். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நூல் : மிஷ்காத்

## 02.சுத்தமாக இருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلطُّهُوْرُ شَطْرُ الْأِيْمَانِ



சுத்தம் ஈமானின் பாதியாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 03.கல்வியைக் கற்கச் செல்வோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

طَلَبُ الْعِلْمِ فَرِيْضَةٌ عَلَى كُلِّ

مُسْلِمٍ وَمُسْلِمَةٍ



இஸ்லாமிய மார்க்க கல்வியை தேடிக்கற்றுக் கொள்வது முஸ்லிமான ஆண் பெண் இரு சாராருக்கும் கட்டாயக் கடமையாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : இப்னு மாஜா



## 04.கல்வியை கற்றுக் கொடுப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ




அல் குர்ஆனை தானும் கற்று அதனை பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 05.அல்லாஹ்வை தொழுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلصَّلَاةُ مِفْتَاحُ الْجَنَّةِ



தொழுகையாகிறது சுவர்க்கத்தின் திறவு கோலாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்

## 06.சகோதரத்துவத்தை பேணுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْمُسْلِمُ اَخُ الْمُسْلِمِ




ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு சகோதரன் ஆவான். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : புஹாரி



## 07.உண்மை பேசுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

انَّ الصِّدْقَ طُمَأْنِيْنَةٌ وَاِنَّ الْكِذْبَ رِيْبَةٌ



நிச்சயமாக உண்மை சொல்வது அமைதியைத்தரும். நிச்சயமாக பொய் சொல்வது சந்தேகத்தை தரும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : திர்மிதி



## 08.வெட்கம் அடைவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الْاِيْمَانِ



வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : புஹாரி



## 09.அல் குர்ஆனை ஓதுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

اقْرَأُوْا الْقُرْآنَ فَاِنَّهُ يَأْتِيْ يَوْمَ

الْقِيَامَةِ شَفِيْعًا لِأَصْحَابِهِ




நீங்கள் அல்குர்ஆனை ஓதுங்கள்.ஏனெனில் அதை ஓதுபவருக்காக மறுமை நாளில் அல்லாஹ்விடத்தில் சிபாரிசு செய்யும்.என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : முஸ்லிம்

## 10.பெற்றோரின் பொருத்தத்தை பெறுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

رِضَى الرَّبِّ فِي رِضَى الْوَالِدِ وَسَخْطُ

الرَّبِّ فِي سَخْطِ الْوَالِدِ



அல்லாஹ்வின் பொருத்தம் தாய் தந்தையரின் பொருத்தத்திலும் அல்லாஹ்வின் கோபம் தாய் தந்தையரின் கோபத்திலும் உள்ளது. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி



## 11.கோபத்தை விட்டும் விலகுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

انَّ الْغَضَبَ لَيُفْسِدُ الْاِيْمَانَ كَمَا

يُفْسِدُ الصَّبِرُ الْعَسَلَ



பித்தம் தேனை பழுதாக்கி விடுவதைப்போல ஈமானை கோபம் பழுதாக்கி விடும்.என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.


நூல் : மிஷ்காத்



## 12.உறவினருடன் அன்பாய் பழகுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

لَا يَدْخُلُ الْجَنَّةَ قَاطِعٌ



உறவுகளை துண்டித்து வாழ்பவன் சொர்க்கம் நுழையமாட்டான். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நூல் : புஹாரி



## 13.இசையை தவிர்ப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْغِنَاءُ يُنْبِتُ النِّفَاقَ فِي الْقَلْبِ

كَمَا يُنْبِتُ الْمَاءُ الزَّرْعَ



விவசாயத்தை தண்ணீர் முளைக்கச்செய்வது போன்று உள்ளத்திலே நயவஞ்சகத் தனத்தை பாடல் முளைக்கச் செய்து விடும்.என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நூல் : மிஷ்காத்

## 14.அல்லாஹ்விடம் துஆ செய்வோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلدُّعَاءُ مُخُّ الْعِبَادَةِ



அல்லாஹ்விடம் துஆ கேட்பது வணக்கத்துக்கு முக்கியமான ஒன்றாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி



## 15.கோள் சொல்லாது இருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

لَا يَدْخُلُ الْجَنَّةَ قَتَّاتٌ



கோள் சொல்பவன் சுவனம் நுழையமாட்டான். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## 16.மரியாதையாக நடப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

أَنْزِلُوْا النَّاسَ مَنَازِلَهُمْ



மக்களுக்கு அவர்களின் அந்தஸ்தை அறிந்து மரியாதை செய்யுங்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : அபூ தாவூத்



## 17.அநியாயம் செய்யாதிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلظُّلْمُ ظُلُمَاتٌ يَوْمَ الْقِيَامَةِ




அநீதம் செய்தல் மறுமை நாளில் இருளாக அமையும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி

## 18.அல்லாஹ்வை பயப்படுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اِتَّقِ اللهَ حَيْثُ مَاكُنْتَ



நீ எங்கிருந்தாலும் அல்லாஹ்வை பயந்து கொள். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : திர்மிதி



## 19.நம்பிக்கையை நிறைவேற்றுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

أَدِّ الْأَمَانَةَ إِلَى مَنِ ائْتَمَنَكَ وَلَا تَخُنْ مَنْ خَانَكَ



உன்னை நம்பிய மனிதனுக்கு நம்பிக்கையை நீ நிறைவேற்று உனக்கு மோசடி செய்தவனுக்கு நீ மோசடி செய்ய வேண்டாம்.என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : அபூதாவூத்



## 20.கூலியை உடனே கொடுப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

أُعْطُوا الْأَجِيْرَ أَجْرَهُ قَبْلَ اَنْ يَجِفَّ عِرْقُهُ



கூலி வேலை செய்பவனுக்கு அவனுடைய வியர்வை காய்வதற்கு முன் அவனுக்குரிய கூலியை கொடுத்து விடுங்கள். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : இப்னு மாஜா



## 21.நல்லதை ஏவுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

مَنْ دَلَّ عَلَى خَيْرٍ فَلَهُ مِثْلُ اَجْرِ فَاعِلِهِ



யாரேனும் ஒரு நன்மையான காரியத்தை பிறருக்கு சொன்னால் இதைக்கேட்டு செயல்படுத்துபவருக்கான கூலியைப்போன்று அதைச் சொன்னவருக்கும் கிடைக்கும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
நூல் : முஸ்லிம்

## 22.தீயதை தடுப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

مَنْ رَأَى مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فَاِنْ

لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ



உங்களில் எவரும் தீமையைக்கண்டால் தனது கையால் அதை தடுக்கட்டும்.இயலாவிட்டால் நாவால் தடுக்கட்டும் என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.


நூல் : முஸ்லிம்



## 23.மதுப்பழக்கத்தை விடுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

كُلُّ شَرَابٍ اَسْكَرَ فَهُوَ حَرَامٌ



போதை தரக்கூடிய அனைத்து பானங்களும் ஹராமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 24.தர்மம் செய்வோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْيَدُ الْعُلْيَا خَيْرٌ مِنَ الْيَدِ السُّفْلَى



பிறரிடம் யாசிப்பதை விட தர்மம் கொடுப்பது சிறந்ததாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## 25.நல்ல வியாபாரியாக இருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلتَّاجِرُ الصَّدُوْقُ الْاَمِيْنُ مَعَ النَّبِيِّيْنَ

وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَاءِ



உண்மையான வியாபாரிகள் மறுமை நாளில் நபிமார்களுடனும்,உண்மையாளர்களுடனும்,தியாகிகளுடனும் இருப்பார்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி

## 26.நல்ல முஸ்லிமாய் வாழ்வோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُوْنَ مِنْ

لِسَانِهِ وَيَدِهِ



எவருடைய நாவாலும், கையாலும் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படாமல் ஈடேற்றம் அடைந்திருக்கிறார்களோ அவரே சிறந்த முஸ்லிமாவார். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## 27.புன்னகையுடன் முகம் பார்ப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اِنَّ مِنَ الْمَعْرُوْفِ اَنْ تَلْقَى اَخَاكَ

بِوَجْهٍ طَلِقٍ



உனது சகோதரனை சிரித்த முகத்தோடு நீ சந்திப்பது நல்ல விடயமாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 28.அன்னியரை பின்பற்றாதிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

مَنْ تَشَبَّهَ بِقَوْمٍ فَهُوَ مِنْهُمْ



ஒரு கூட்டத்தின் பழக்க வழக்கங்களில் யார் ஒப்பாக நடக்கிறானோ அவன் அவர்களைச் சேர்ந்தவன். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : அபூதாவுத்



## 29.நல்ல மனைவியாய் வாழ்வோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

أَيُّمَا امْرَأَةٍ مَاتَتْ وَزَوْجُهَا عَنْهَا رَاضٍ

دَخَلَتِ الْجَنَّةَ




எந்த பெண்மணி தன்னுடைய வாழ்க்கையில் தனது கணவனை சந்தோசப்படுத்தி வாழ்ந்து மரணமடைந்தாளோ அவள் நிச்சயமாக சொர்க்கம் நுழைந்து விடுவாள். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : மிஷ்காத்

## 30.மிஸ்வாக் செய்வோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلسِّوَاكُ مَطْهَرَةٌ لِلْفَمِ مَرْضَاتٌ لِلرَّبِّ



மிஸ்வாக் செய்வது வாய்க்கு சுத்தத்தையும் அல்லாஹ்வுக்கு பொருத்தத்தையும் உண்டுபன்னக் கூடியதாகும்என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.


நூல் : நஸஈ



## 31.பிறரை ஏமாற்றாமலிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

مَنْ غَشَّ فَلَيْسَ مِنَّا



யார் ஏமாற்றுகிறாரோ அவர் எங்களைச் சார்ந்தவரில்லை என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 32.நல்ல நண்பனோடு பழகுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْوَحْدَةُ خَيْرٌ مِنْ جَلِيْسِ السُّوْءِ

وَالْجَلِيْسُ الصَّالِحُ خَيْرٌ مِنَ الْوَحْدَةِ



கெட்ட நண்பனோடு பழகுவதை விட தனித்திருப்பது சிறந்ததாகும். நல்ல நண்பனோடு பழகுவது தனித்திருப்பதை விட சிறந்ததாகும்என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.


நூல் : மிஷ்காத்



## 33.திருடாமல் இருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

لَايَحِلُّ مَالُ امْرِئٍ اِلَّا بِطِيْبِ نَفْسٍ مِنْهُ



ஒரு மனிதனின் பொருளை அவனுடைய மனவிருப்பமின்றி எடுப்பது ஹராமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நூல் : மிஷ்காத்

## 34.சிறந்த பெண்ணாய் இருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلدُّنْيَا كُلُّهَا مَتَاعٌ وَخَيْرُ مَتَاعِ

الدُّنْيَا الْمَرْأَةُ الصَّالِحَةُ



இவ்வுலகம் அனைத்தும் ஒரு செல்வமாகும். அவற்றில் சிறந்த செல்வம் நல்லொழுக்கமுள்ள பெண்ணாவாள். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 35.ஆயுதத்தை ஏந்தாதிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

مَنْ حَمَلَ عَلَيْنَا السِّلَاحَ فَلَيْسَ مِنَّا



எங்களுக்கு எதிராக யார் ஆயுதத்தை சுமக்கிறாரோ அவர் எங்களைச் சார்ந்தவர் அல்ல. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## 36.அவசரப்படாதிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْأَنَاةُ مِنَ اللهِ وَالْعَجَلَةُ مِنَ الشَّيْطَانِ



பொருமையாக இருப்பது அல்லாஹ்வுடைய புறத்தில் நின்றுமுள்ளதாகும். அவசரப்படுவது இப்லீசினுடைய புறத்தில் நின்றுமுள்ளதாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி



## 37.நற்குணமுடையவராக இருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

اَلْبِرُّ حُسْنُ الْخُلُقِ



ஒவ்வொரு நல்ல காரியங்களும் நற்குணமாகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி

## 38.சிறியோருக்கு இரக்கம் காட்டுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

مَنْ لَمْ يَرْحَمْ صَغِيْرَنَا وَلَمْ يُوَقِّرْ

كَبِيْرَنَا فَلَيْسَ مِنَّا



சிறியவர்களுக்கு இரக்கம் காட்டாதவனும் பெரியோருக்கு மரியாதை செய்யாதவனும் எங்களைச் சார்ந்தவன் அல்ல என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## 39.ஒரு முஸ்லிமை ஏசாமலிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

سِبَابُ الْمُسْلِمِ فُسُوْقٌ وَقِتَالُهُ كُفْرٌ



ஒரு முஸ்லிமை ஏசுவது பாவமாகும். அவனை கொலை செய்வது குப்ராகும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்



## 40.அண்டை வீட்டாருக்கு உதவுவோம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

لَيْسَ الْمُوْمِنُ الَّذِيْ يَشْبَعُ وَجَارُهُ

جَائِعٌ اِلَى جَنْبِهِ



தனது அண்டை வீட்டார் பசித்திருக்க தான் வயிறு நிறைய உண்ணுபவன் ஒரு மு..மின் அல்ல. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## 41.சேவலை திட்டாமலிருப்போம்

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

لَاتَسُبُّوْا الدِّيْكَ فَاِنَّهُ يُوْقِظُ

لِلصَّلَاةِ



நீங்கள் சேவலை ஏச வேண்டாம். ஏனெனில் அது உங்களை தொழுகைக்காக விழித்தெழச்செய்கிறது. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : அபூ தாவூத்

## 42.ஒற்றுமையை கடைப்பிடிப்போம்

قَـــــالَ النَّــــبِيُّ صَـــــلَّى اللهُ عَلَيْــــهِ وَسَـــــلَّمْ

يَـــدُ اللهِ عَلَـــى الْجَمَاعَـــةِ



அல்லாஹ்வின் உதவி ஒற்றுமையாக உள்ள ஒரு கூட்டத்தின் மீதே உள்ளது. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : திர்மிதி



## 43.நோய் விசாரிப்போம்

قَـــــالَ النَّــــبِيُّ صَـــــلَّى اللهُ عَلَيْــــهِ وَسَـــــلَّمْ

عُـــوْدُوا الْمَـــرِيْضَ وَأَطْعِمُـــوْا الْجَـــائِعَ



நோயாளியை விசாரிக்கச்செல்லுங்கள். பசித்திருப்பவருக்கு உணவளியுங்கள். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல் : புஹாரி



## நூலாசிரியரின் வெளியீடுகள்

1. அருள்மறை பற்றி அறிய வேண்டியவை சில..
2. முத்து நபிகளார் பற்றிய முத்துக்கள் முப்பது
3. சந்தர்ப்ப துஆக்கள்
4. நறுமணங்கமழும் நபி மொழிகள்

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது யா ரப்பீ
ஸல்லீ அலைஹி வஸல்லம்